**O.S. No. : 01/2016**

Dated: 23.06.2026

**பி.வா.சா. 3 : மகேந்திரகுமார் ; த/பெ. முருகேசன்**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

4. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். 2 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் நகராட்சி ஆணையாளர்தான் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

5. நீதிமன்றத்தில் பொய்யான தகவல்கள் கூறினால் அது தண்டணைக்குரிய குற்றம் என்பது எனக்கு தெரியும். நான் உதகமண்டலம் நகராட்சியில் 29.12.2023 அன்று பணிக்கு சேர்ந்தேன். நான் 2023 ஆம் ஆண்டில் பணிக்கு சேர்ந்துள்ள நிலையில் 2013 ஆம் ஆண்டு நடந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு 2016 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டபோது என்ன நடைபெற்றது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

6. இந்த வழக்கில் வாதி உதகமண்டலம் நகராட்சிக்கு எதிராக என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் தெரியவில்லை. இந்த வழக்கில் வாதி, மற்ற பிரதிவாதிகள் மீது என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் தெரியும். கட்டிட அனுமதி கோரி செய்யப்படும் விண்ணப்பத்துடன் என்னென்ன ஆவணங்கள் இணைத்து தாக்கல் செய்யவேண்டும் என்றால் சொத்தின் உரிமை ஆவணம், வில்லங்க சான்று, உரிமை உள்ளதை காண்பிக்கும் சிட்டா மற்றும் அடங்கல் ஆவணங்கள், புள்ளியியல் துறைக்கு சமர்ப்பிக்கும் ஆவணங்கள், கட்டிட வரைபட அசல் ஆகியவை தாக்கல் செய்யப்படவேண்டும்.

7. கட்டிட அனுமதி கோரி விண்ணபிக்கும்போது சுவாதீனத்தை உறுதிப்படுத்த Vacant Land Tax விண்ணப்பதாரரிடமிருந்து பெறப்படும் என்றால் சரிதான். மேற்படி கூறிய ஆவணங்களுடன் விண்ணப்பித்த பிறகு மேற்படி விண்ணப்பத்தின் நிலை திருப்தியான பிறகுதான் உள்ளூர் திட்ட குழுமத்தில் தீர்மானம் பிறப்பிக்கப்பட்டு கட்டிட அனுமதி வழங்கப்படும் என்றால் சரிதான்.

இந்த வழக்கின் வாதி தேவையான ஆவணங்களை விண்ணப்பத்துடன் தாக்கல் செய்ததால்தான் அவருக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

8. வாதி கட்டிட அனுமதி கோரி விண்ணப்பித்த பிறகு சொத்தினை ஆய்வு செய்து சொத்து காலி இடமாக உள்ளதை தெரிந்துகொண்டுதான் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி எந்த உரிமை ஆவணத்தின் அடிப்படையில் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பித்தார் என்றால் 604/2013 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்ட செட்டில்மண்ட் பத்திரத்தின் அடிப்படையில் விண்ணப்பம் செய்துள்ளார்.

9. கட்டிட விண்ணப்பமானது வனத்துறை, புவியியல்துறை மற்றும் வேளாண்மை துறை ஆகிய மூன்று துறைகளில் தடையின்மை சான்று பெற்ற பிறகுதான் அனுமதிக்கப்படும் என்றால் சரிதான், ஆனால் 150 சதுர மீட்டருக்கு கீழ் கட்டிட விண்ணப்பம் இருந்தால் புவியியல் துறையில் மட்டும் தடையின்மை சான்று பெற்றால் போதுமானதாகும். வாதி தாக்கல் செய்த கட்டிட அனுமதி விண்ணப்பமானது உரிய துறையில் தடையின்மை சான்று பெற்றுதான் அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான்.

10. 2 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை பத்தி–4–ல் செட்டில்மண்ட் பத்திரம் குறித்தும், அது ரத்து செய்யப்பட்டது குறித்தும் உதகமண்டலம் நகராட்சிக்கு எதுவும் தெரியாது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். உதகமண்டலம் நகராட்சிக்கு விண்ணபத்துடன் பதிவு செய்யப்பட்ட செட்டில்மண்ட் பத்திரத்தை வாதி வழங்கியது அது குறித்து தெரியாது என்று தவறான தகவலை எதிர்வழக்குரையில் 2 ஆம் பிரதிவாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, செட்டில்மண்ட ஆவணம் ரத்து செய்யப்பட்டது தெரியாது என்றுதான் கூறப்பட்டுள்ளது.

11. வாதிக்கு கட்டிட அனுமதி வழங்கும்போது எந்தவித உரிமையியல் பிரச்சனை இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டுதான் கட்டிட அனுமதி வழங்கப்பட்டது என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் கட்டிட அனுமதியானது சொத்தின் உரிமை குறித்த ஆவணங்களின் உண்மைதன்மை குறித்த நிபந்தனையுடன்

கொடுப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள நிலையில் தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 கட்டிட அனுமதி உத்தரவில் அவ்வாறு உரிமை ஆவணத்தின் உண்மைதன்மை குறித்து ஏதாவது நிபந்தனை கூறப்பட்டுள்ளதா என்றால் கூறப்படவில்லை.

12. செட்டில்மண்ட் பத்திரமானது 13.05.2013 தேதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் 3 வருடங்கள் கழித்துதான் அது 01.04.2015 அன்று ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2013 முதல் 2015 ஆம் ஆண்டுவரை உதகமண்டலம் நகராட்சிக்கு வழக்கு சொத்து குறித்து எந்தவித புகாரும் வரவில்லை என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி 2016 ஆம் ஆண்டுதான் உதகமண்டலம் நகராட்சிக்கு புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

13. அவ்வாறு 2016 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில்தான் கட்டிட அனுமதி ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். கட்டிட அனுமதி விண்ணப்பம் தாக்கல் செய்த நாளிலிருந்து, புகார் 2016 ஆம் ஆண்டு பெறப்பட்ட பிறகும், கட்டிட அனுமதி ரத்து செய்யும் தேதிவரை உதகமண்டலம் நகராட்சியால் வாதி அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டாரா என்றால் இல்லை. வாதியிடம் விளக்க கடிதம் எதாவது கேட்கப்பட்டதா என்றால் அது பற்றி தெரியவில்லை, பதிவுகளில் அவ்வாறு விளக்க கடிதம் கேட்கப்பட்டதாக பதிவு எதுவும் இல்லை.

14. கட்டிட அனுமதி ரத்து செய்து உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பு வாதியிடம் காரண விளக்கமோ, விசாரணையோ நடத்தப்படவில்லை என்றால் சரிதான், ரத்து செய்யப்பட்டதற்கான அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. ஆட்சேபனை கொடுத்த 1 ஆம் பிரதிவாதி லிங்கன் என்பவரையாவது அழைத்து விசாரித்து அவரிடம் உதகமண்டலம் நகராட்சியால் வாக்குமூலம் ஏதாவது பெறப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

15. 05.05.2017 தேதியில் வாதி நகராட்சி ஆணையாளர் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அது நகராட்சியால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் அறிவிப்பின் நகல்தான் அவ்வாறு அனுப்பப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். **(அந்த 05.05.2017 தேதியிட்ட**

**வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

16. மேற்படி 05.05.2017 தேதியிட்ட வா.சா.ஆ.7 வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நகராட்சி எந்தவித பதிலும் அளிக்கவில்லை என்றால் சரிதான். கட்டிட அனுமதி ரத்து செய்யப்பட்டது குறித்து எந்த தகவலும் வாதிக்கும், 1 ஆம் பிரதிவாதிக்கும் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரியல்ல, அறிவிப்பு இருவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 ஒப்புகை அட்டை நகலில் உள்ள கையொப்பம் வாதியுடையது அல்ல என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் வாதியின் கையொப்பம் போலியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

17. கட்டிட அனுமதியை ரத்து செய்து உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பாக வாதிக்கு எந்தவித அறிவிப்பும் அனுப்பாமலும், உரிய விசாரணை நடத்தாமலும், கட்டிட அனுமதியை ரத்து செய்துள்ளது இயற்கை நீதிக்கு முரணானது என்றால் சரியல்ல. ரத்து செய்யப்பட்ட கட்டிட அனுமதியை மீண்டும் வழங்க உதகமண்டலம் நகராட்சிக்கு அதிகாரம் உள்ளது என்றால் மீண்டும் விண்ணப்பித்தால் உரிய உரிமையாளருக்கு கட்டிட அனுமதி வழங்கப்படும்.

18. இயற்கை நீதிக்கு மாறாக கட்டிட அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளதால் அவ்வாறு ரத்து செய்யப்பட்ட கட்டிட அனுமதியை மீண்டும் வழங்க உதகமண்டலம் நகராட்சி கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, சொத்தின் உரிமை குறித்த ஆவணங்களை சமர்ப்பித்தால் அதை பரிசீலித்து உத்தரவு பிறப்பிக்கப்படும்.

19. உதகமண்டலம் நகராட்சி செய்த தவறினை மறைப்பதற்காகத்தான் எதிர்வழக்குரை சங்கதிகளுக்கு முரணாக முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் பெற வாதிக்கு தகுதியுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.06.23 01:53:36 +0530